අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/11/02/01(I)

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2021.05 28

சுற்றுநிருப இலக்கம்: 13/2021

மாகாண பிரதாம செயலாளர்கள்
மாகாண கல்வி செயலாளர்கள்
மாகாண கல்வி பணிப்பாளர்கள்
வலய கல்வி பணிப்பாளர்கள்
கோட்ட பொறுப்பு பிரதி ∴ உதவி கல்வி பணிப்பாளர்கள்
அனைத்து பாடசாலை அதிபர்கள் கவனத்துக்கு

**பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை உள்வாங்குதல்**

பாடசாலைகளுக்க முதலாம் தரத்துக்கு மாணவர்களை உள்வாங்குவது தொடர்பில் இதற்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட 2019.05.24 திகதிய 29.'.2019 இலக்க சுற்றுநிருபம் , அதற்குரிய திருத்தம் மற்றும் அறிவுறுத்தல் ஆவணம் தொடர்பில் உங்கள் கவனத்தை ஈர்க்கின்றோம்.

அதன் படி, 2019.05.24 திகதிய 29.'.2019 (ஐ) சுற்றுநிருபம் இத்தால் வலுவிழக்கச் செய்யப்படுவதோடு, மேற்குறித்த 29.'.2019 சுற்றுநிருபத்தில் கீழ்க்காணம் உறுப்புரைகளுக்கு உரிய அறிவுறுத்தல்கள் மட்டுமே 2022 ஆண்டுக்கும் அதற்கு அடுத்தும் வலுவிலிருக்குமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

கீழ்க் காட்டப்பட்டுள்ள அந்த திருத்தத்துக்கு அமைய இதற்கு பின்னர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு. மேலே 29.'.2019 சுற்றுநிருபத்தில் இத்துடன் திருத்தப்படாத ஒழுங்குகள் மற்றும் 2020.05.26 திகதிய 16.'.2020 இலக்கம் கொண்ட சுற்றநிருபத்தில் குறிப்பிட்ட ஒழுங்குகள் அந்த விதமாக்வே வலுவில் உள்ளதாக இருக்கும்.

4.1 2022 மற்றும் இதற்கு பின்னர் ஒரு சமாந்தர வகுப்பிற்கு நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை 35 ஆக இருக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக யுத்த நடவடிக்கை கடமையினருக்கான சலுகையின் கீழ் வகுப்புக்கு தெரிவ செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 5 ஆகும். ஆதற்கு அமைய மாணவர் எண்ணிக்கை 40 ஆகும்.

7.1.5 வதிவிட நிலையத்திலிருந்து விண்ணப்பிக்கின்ற பாடசாலைக்கு உள்ள அண்மித்த தன்மையை கருத்திற் கொள்ளும் போது விண்ணப்பதாரரின் வீட்டை (பிரதான வாசல்) மையமாகக் கொண்டு கோரும் பாடசாலையின் பிரதான காரியாலயத்துக்கு ( ஆரம்பப்பிரிவு பிரதான பாடசாலையிலிருந்து புறம்பாக வேறு வளாகத்தில் நடத்தப்படுமாயின் அதன் காரியாலயத்துக்கு) உள்ள (வான்) தூர ஆரையைக் கொண்டு வரையப்படும் வட்டத்தின் எல்லைக்குள் உளளே வரும் பாடசாலைகளுக்காக புள்ளிகள் குறைக்கப்படும். இதன் போது பிரதான பாடசாலைக்கு புறம்பாக வேறு வளாகத்தில் ஆரம்பப் பிரிவு அமைந்துள்ள பாடசாலை தொடர்பில் புள்ளிகள் குறைக்கப்பட வேண்டியது, ஆரம்ப பிரிவு அமைந்துள்ள நிலையமாகும் என்பதோடு இடைநிலை பிரிவு அமைந்துள்ள நிலையத்துக்கு அல்ல,

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

**யாதும் பாடசாலை மேற்கூறிய வட்ட எல்லைக்குள் இருந்தாலும் ஆறு, கடல்நீர் ஏரி, ஈர நிலம் [illegible] வனம் முதலிய இயற் [illegible] அல்லது அதிவேக சாலை இருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டும் வீட்டிலிருந்து அந்த பாடசாலைக்கு பயணிக்கக்கூடிய குறுகிய வழியின் தூரமானது கோரப்படும் பாடசாலைக்கு உள்ள குறுகிய வழித் தூரத்துக்கும் அதிகமாயின் புள்ளிகள் குறைக்கப்படுதல் கூடாது.** அதன் போது பெற்றோர் ஏற்றக்கொள்ளக் கூடிய சாட்சியங்கள் சகிதம் வழி வரைபடத்தை நேர்முகப் பரீட்சை சபையினரிடம் முன் வைக்க வேண்டும்.

மேற்குறித்த சந்தர்ப்பத்தில் அண்மைத்தன்மை பரிசோதிப்பு செய்வதற்காக அரச அளவை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அளவுத் திட்டம் 1:10000 வரைபடம் பாவிக்கப்பட வேண்டும் என்பதோடு , சர்ச்சையுடன் கூடிய சந்தர்பத்தில் கூகுள் வரைபடத்துடன் (புழழபடந ஆயி) ஒப்பிட்டுப் பார்க்கப்பட வேண்டும்.

மேலே வழித்தூரம் கணக்கிடும் போது நடைமுறை பிரச்சனைகள் தோன்றும் போது தீர்த்துக்கொள்ள சந்தர்ப்பத்துக்கு உகந்த நியாயமானதும் பொதுவானதுமான தீர்மானங்களை மேற்கொள்ள நேர்முக பரீட்சை சபையினருக்கு அதிகாரம் உரித்தாவதோடு, அந்த தீர்மானங்களை காரணங்கள் சகிதம் குறித்துக் கொள்ள வேண்டும்.

9.3.1 இரண்டாவது பகுதி மாத்திரம் கீழ்க்காணும் விதமாக திருத்தப்படுகின்றது.

இதற்காக இந்த சுற்றுநிருபத்தின் 4.1 உப உறுப்புரைக்கு அமைய, அந்த அந்த வருடத்தில் வகுப்பின் மாணவர் எண்ணிக்கையை யுத்த நடவடிக்கை கடமையினருக்கான சலுகையின் கீழ் வழங்கப்படும் வெற்றிடத்தை குறைப்பதோடு உரிய வருடத்தில் நேர்முக பரீட்சை ஊடாக தெரிவு செய்யப்படும் மாணவர் எண்ணிக்கையை தீர்மானிப்பது மேற்கொள்ளப்பட வேண்டும். 2022 ஆம் வருடம் தொடக்கம் சமாந்தர வகுப்புக்கு நேர்முக பரீட்சையில் தெரிவு செய்யக்கூடிய மாணவர் எண்ணிக்கை 35 ஆகும். தற்காலிக பட்டியலுக்கு மேலதிகமாக, புள்ளி முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொரு வகுதியினருக்கு வெவ்வேறாக வெற்றிட எண்ணிக்கையில் 50மூ ஆகுமாறு தற்காலிக காத்திருப்பு பட்டியல் ஆவணம் தயாரிக்கப்பட வேண்டும்.

பேராசிரியர் கே. கபில சீ.கே. பெரேரா
கல்வி செயலாளர்